**OS. 61/2022**

**நாள். 09.09.2024.**

**வா.சா. 1 –** பாலு த/பெ.மூக்கன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

எனக்கு வயது 77. என்னுடைய வயது 80 என்று சொன்னால் வழக்கு கொடுக்கும்போது வயது 77 தற்போது 80 வயது. நான் ஆசிரியராக இருந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் தற்போது தொழில் எதுவும் செய்யவில்லை. வேண்டியவர்கள் திருமணம் போன்ற முக்கியமான விசயங்களுக்கு யாராவது கேட்டால் மிகக்குறைந்த வட்டிக்கு பணம் கொடுக்கிறேன். வட்டித் தொழில் செய்வதற்கு நான் உரிமம் பெறவில்லை. வருமானவரி செலுத்தவில்லை. காரணம் ரூ.7 இலட்சம் வரை வருமான வரி இல்லை. எனக்கு 4 பெண்கள், ஒரு மகன். 4 பெண்களும் திருமணமாகி அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகின்றனர் என்று சொன்னால் சரிதான். என் மனைவி காலமாகிவிட்டார். என் மகன் வேலூரில் தனிக்குடித்தனமாக வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் தற்போது தனியாக வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் கடன் தொகை பொறுத்து வருமானவரிக்கணக்கில் காட்டியிருக்கிறீர்களா என்று கேட்டால் என் சேமிப்பிலிருந்து கொடுத்ததால் வருமானவரி கணக்கில் காட்டவில்லை. இது பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன் என்பதால் வருமானவரி கணக்கில் இதனை காட்டவேண்டும் என்று சொன்னால் நான் வருமானவரி கணக்கில் காட்டவில்லை. நான் சொன்ன தேதியில் கடன் கொடுக்கவில்லை என்பதால்தான் வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 2007 டிசம்பரில் பணிஓய்வு பெற்றேன். நான் ரூ.45,000/– மாத ஓய்வூதியமாக பெற்று வருகிறேன். வருமானவரி பிடித்தம் இல்லாமல் எனக்கு மாத ஓய்வூதியம் வருகிறது. நான் 2009–ல் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். அதற்கு ரூ.2,50,000/– செலவானது அதில் ரூ.1 இலட்சம் அரசாங்கம் கொடுத்தது, மீதி ரூ.1,50,000/–த்தை என் மகன் கொடுத்தான். என் மகனுக்கும்,

எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மருத்துவ செலவாக மாதம் ரூ.5,000/- செலவாகிறது என்று சொன்னால் சரியல்ல, மாதம் ரூ. 1,500/- செலவாகிறது. எனக்கு வீட்டு வாடகையாக மாதம் ரூ.9,500/- வருமானம் வருகிறது. ஒரு மகளின் கணவருக்கு வசதியில்லாததால் அவருடைய கணவரையும், குழந்தைகளையும் நான்தான் பராமரித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய 2-ஆவது மகள் வீட்டிலிருந்து எனக்கு சாப்பாடு வருகிறது. என்னுடைய ஒரு மகளின் குடும்பத்தை பராமரிப்பதற்கும், என்னுடைய மருத்துவ செலவுக்குமே நான் பெற்றுவரும் ஓய்வூதிய தொகை செலவாகிவிடுகிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என் வீட்டிற்கு எதிர்த்த வீட்டில் குடியிருந்து வந்ததால் பழக்கமானார்கள். ராஜேந்திரன் என்பவர் பிரதிவாதி சத்யாவின் அப்பா. பிரதிவாதியின் அப்பாதான் எனக்கு பழக்கமானவர் என்றும், பிரதிவாதியை நான் பார்த்ததுகூட கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் அப்பா ராஜேந்திரன் மீது ஒரு வழக்கு போட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கின் விவரங்களை இந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி எனக்கு மருமகள்முறை என்று இந்த வழக்கு சம்மந்தமாக நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி குடும்ப பழக்கவழக்கத்தின் அடிப்படையில் நன்கு அறிமுகமானவர் என்று இந்த வழக்கின் பிராதில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் பிராதில் அவர் என் மருமகள்முறை என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி வீட்டுக்குடித்தனம் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி அவருடைய தொழில் அபிவிருத்திக்காகவும், அவசிய தேவைக்காகவும் வழக்குரையில் கண்ட சொத்தை அடமானம் காட்டி கடன் பெற்றதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் பெயர் தாமரை செல்வன். பிரதிவாதியின் கணவர் என்னிடம் 2015-ல் ரூ.15 இலட்சம் கடன் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. அவர் அவ்வாறு கடன் வாங்கினார் என்றும், 2020 மார்ச் மாதம் வரை வட்டி கொடுத்து வந்தார் என்றும் சொன்னால் அவர் என்னிடம் கடன் வாங்கவும் இல்லை, வட்டி கொடுக்கவும் இல்லை. அவர் அவ்வாறு கடன் வாங்கி வட்டி கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு

பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு பக்கத்தில் வைத்து ரூ.25 இலட்சம் பணம் கொடுத்தேன். அதை சார்பதிவாளர் நேரில் பார்க்கவில்லை. அந்த பணத்தை முழுவதுமாக ரூ.500/– நோட்டுகளாக 50 கட்டு கொடுத்தேன். பிரதிவாதியின் கணவருக்கு நான் 2015–ல் ரூ.15 இலட்சம் கொடுத்திருந்தேன் என்றும், அந்த பணத்தை அவர் திருப்பி தராததால் அவருடைய வீட்டிற்கு சென்று அடாவடித்தனம் செய்து தாவா அடமானக்கடன் பத்திரத்தை எழுதி வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த பத்திரம் பெயரளவுக்கு ஏற்பட்ட ஒன்று என்றும், வாங்கிய கடனை வட்டியுடன் செலுத்திவிட்டால் இந்த பத்திரத்தை ரத்து செய்துவிடுவேன் என்று நான் பிரதிவாதியிடம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு அடமானக்கடன் பத்திரத்திற்கு வட்டி எதுவும் செலுத்தப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஒருவர் கடன் வாங்கி திரும்ப செலுத்தாதநிலையில் அவருடைய கணவருக்கும், தகப்பனாருக்கும் மறுபடியும் கடன் கொடுப்பேனா என்று கேட்டால் அவருடைய கணவருக்கு கொடுக்கமாட்டேன், பிரதிவாதியின் அப்பாவுக்கு தகுந்த ஆவணங்கள் இருந்ததால் கடன் கொடுத்தேன். பிரதிவாதியின் தகப்பனாருக்கு 02.08.2021–ல் ரூ.17 இலட்சம் கடன் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த கடன் தொகையையும் நான் வருமானவரி கணக்கில் காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் ரூ.15 இலட்சம் கடன் வாங்கினார் என்றும், அந்த கடனை திருப்பி செலுத்தாததால் இந்த வழக்கின் அடமானக்கடன் பத்திரம் பெயரளவில் எழுதி வாங்கப்பட்டது என்றும், அந்த ரூ.15 இலட்சம் செலுத்தப்படாததால் பிரதிவாதியின் தகப்பனாரை ஏமாற்றி மருமகனை ஜெயிலில் வைத்துவிடுவேன் என்று சொல்லி 02.08.2021–ல் ஒரு கடனுறுதி சீட்டை எழுதி வாங்கினேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில்கண்ட அடமானகடன் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை நான் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் 02.08.2021–ல் பிரதிவாதியின் தகப்பனாருக்கு நான் ரூ.17 இலட்சத்தை கொடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2015–ல் பிரதிவாதியின் கணவருக்கு நான் ரூ.15 இலட்சம் கடனாக கொடுத்தேன் என்றும், அந்த பணத்தை அவர் திருப்பி செலுத்தாததால் பிரதிவாதியிடம் வழக்கு அடமான கடன் பத்திரத்தையும், பிரதிவாதியின் தகப்பனாரிடம் கடனுறுதி

சீட்டையும் வலுக்கட்டாயமாக எழுதிவாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எந்த தொழிலும் செய்யாமல் வீட்டுக் குடித்தனமாக இருந்து வருகிறார் என்று சொன்னால் அவர் தொழில் செய்கிறாரா, இல்லையா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ட தொகையை நான் பிரதிவாதிக்கு தரவில்லை என்றும், அதனால் வழக்கில் கோரியுள்ளவாறு தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**